**செ. கு. எண்: 199** **நாள்: 14.11.2018**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 14.11.2018

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், கட்டிமேடு கிராமத்தைச் சேர்ந்த திரு. ஜெயராமன் அவர்கள் "நமது நெல்லை காப்போம்" என்ற இயக்கத்தின் மூலம் பாரம்பரிய விவசாயத்தினை போற்றிப் பாதுகாத்து இயற்கை முறையில் பாரம்பரிய நெல் ரகங்களை உற்பத்தி செய்து, அனைத்து விவசாயிகளும் பயன் பெற வேண்டும் என்ற உயர்ந்த நோக்கில் சேவை செய்து வருகிறார்.

திரு. ஜெயராமன் அவர்கள் பாரம்பரிய நெல் ரகங்களை பாதுகாத்து தமிழ்நாடு விவசாயிகளிடையே பிரபலப்படுத்தி, விவசாயிகள் அதனை பயிரிட்டு, பயன் பெறும் வகையில் பல நடவடிக்கைகளை மேற்கொண்டவர். இவர் மாப்பிள்ளை சம்பா, ராஜமன்னார், கவுனி, மிளகுசம்பா, குண்டு கார், சேலம் சம்பா, சிகப்பு குருவிகார், கல்லிமடையான், சம்பா மோசானம், வாடன் சம்பா, பிச்சாவாரி, நவரா, நீலன் சம்பா போன்ற 174 பாரம்பரிய நெல் ரகங்களை மீட்டெடுத்து, விவசாயிகளிடையே பிரபலபடுத்தி உள்ளார். மேலும், ஆண்டு தோறும் மே மாதம் அவரது அனுபவங்களை மற்ற விவசாயிகளுடன் பரிமாறிக்கொள்ளும் வகையில் "பாரம்பரிய நெல் திருவிழாவினை," 2006-ம் ஆண்டு முதல் நடத்தி, ஒவ்வொரு விவசாயிக்கும் 2 கிலோ பாரம்பரிய விதைகளை இலவசமாக வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

திரு. ஜெயராமன் அவர்கள் இதுவரை சுமார் 37,000 வேளாண் பெருமக்களை இயற்கை விவசாயத்தில் ஈடுபடுத்தி, தமிழ்நாட்டில் பாரம்பரிய நெல் உற்பத்தியினை உயர்த்திய பெருமைக்குரியவர். மேலும்,

இவர் “மாமருந்தாகும் பாரம்பரிய நெல்”, “நெல்லதிகாரம்’’ மற்றும் ‘‘நெல்லுக்கிறைத்த நீர்’’ போன்ற நெல் தொடர்பான நூல்களை எழுதி, விவசாயிகளிடையே பாரம்பரிய நெல் ரகங்களை பிரபலப்படுத்தியும் அதன் உற்பத்தியை ஊக்கப்படுத்தியும் உள்ளார்.

தமிழ்நாட்டு விவசாயிகளுக்காக இத்தகைய அரிய சேவையை செய்து வரும் திரு. ஜெயராமன் அவர்கள் தற்போது புற்றுநோயால் பாதிக்கப்பட்டு சென்னையிலுள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன்.

புற்றுநோயால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் திரு. ஜெயராமன் அவர்கள் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்பி, மீண்டும் விவசாயிகளுக்கு சேவையாற்ற வேண்டும் என்ற எனது விருப்பத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

பாரம்பரிய நெல் ரகங்களை பாதுகாப்பதில் திரு. நெல் ஜெயராமன் அவர்கள் ஆற்றிய சிறப்பான சேவையினை தமிழ்நாடு அரசு அங்கீகரித்து பாராட்டும் விதமாக அவருக்கு 5 லட்சம் ரூபாய் நிதியினை உடனடியாக வழங்கிட வேளாண்மைத் துறைக்கு நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**